# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# பத்தாம் பத்து

## ஐந்தாம் திருமொழி - பூங்கோதை
## க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 2
## [கண்ணனைக் கைகொட்டி விளையாடும்படி கூறுதல்]

** பூங்கோதை ஆய்ச்சி * கடைவெண்ணை புக்குண்ண *
ஆங்கவள் ஆர்த்துப் * புடைக்கப் புடை உண்டு **
ஏங்கி இருந்து * சிணுங்கி விளையாடும் *
ஓங்கோத வண்ணனே! சப்பாணி * ஒளி மணிவண்ணனே! சப்பாணி 1

தாயர் மனங்கள் தடிப்ப * தயிர் நெய் உண்
டே எம்பிராக்கள் ** இருநிலத்து எங்கள் தம் *
ஆயர் அழக! * அடிகள் அரவிந்த
வாயவனே! கொட்டாய் சப்பாணி * மால்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 2

தா மோர் உருட்டித் * தயிர் நெய் விழுங்கிட்டு *
தாமோ தவழ்வர் என்று * ஆய்ச்சியர் தாம்பினால் **
தாமோதரக் கையால் * ஆர்க்கத் தழும்பிருந்த *
தாமோதரா! கொட்டாய் சப்பாணி * தாமரைக் கண்ணனே! சப்பாணி 3

பெற்றார் தளை கழலப் * பேர்ந்தங்கு அயல் இடத்து *
உற்றார் ஒருவரும் இன்றி * உலகினில் **
மற்றாரும் அஞ்சப் போய் * வஞ்சப் பெண் நஞ்சுண்ட *
கற்றாயனே! கொட்டாய் சப்பாணி * கார்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 4

சோத்தென நின்னைத் * தொழுவன் வரம் தர *
பேய்ச்சி முலை உண்ட பிள்ளாய்! ** பெரியன
ஆய்ச்சியர் அப்பம் தருவர் * அவர்க்காகச்
சாற்றி ஓர் ஆயிரம் சப்பாணி * தடங்கைகளால் கொட்டாய் சப்பாணி 5

கேவலம் அன்று உன் வயிறு * வயிற்றுக்கு
நான் * அவல் அப்பம் தருவன் ** கருவிளைப்
பூவலர் நீள்முடி * நந்தன் தன் போர் ஏறே! *
கோவலனே! கொட்டாய் சப்பாணி * குடமாடீ! கொட்டாய் சப்பாணி 6

புள்ளினை வாய் பிளந்து * பூங்குருந்தம் சாய்த்து *
துள்ளி விளயாடித் * தூங்குறி வெண்ணெயை **
அள்ளிய கையால் * அடியேன் முலை நெருடும் *
பிள்ளைப் பிரான்! கொட்டாய் சப்பாணி * பேய்முலை உண்டானே! சப்பாணி 7

யாயும் பிறரும் * அறியாத யாமத்து *
மாய அலவைப் * பெண் வந்து முலை தர **
பேய் என்று அவளைப் * பிடித்து உயிரை உண்ட *
வாயவனே! கொட்டாய் சப்பாணி * மால்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 8

கள்ளக் குழவியாய்க் * காலால் சகடத்தை *
தள்ளி உதைத்திட்டுத் * தாயாய் வருவாளை **
மெள்ளத் தொடர்ந்து * பிடித்து ஆருயிர் உண்ட *
வள்ளலே! கொட்டாய் சப்பாணி * மால்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 9

** காரார் புயற்கைக் * கலிகன்றி மங்கையர் கோன் *
பேராளன் நெஞ்சில் * பிரியாது இடங்கொண்ட
சீராளா! ** செந்தாமரைக் கண்ணா! தண் துழாய் *
தாராளா! கொட்டாய் சப்பாணி * தடமார்வா! கொட்டாய் சப்பாணி 10

**அடிவரவு:** பூங்கோதை தாயர் தாமோர் பெற்றார் சோத்தென கேவலம் புள்ளினை யாயும் காரார் எங்கானும்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**